DINAKARAN

6 NOV 2022

PAGE 14

# புதுவை பல்கலையில் சிறப்பு கருத்தரங்கம்

புதுச்சேரி, நவ. 6: புதுவை பல்கலைக்கழகம் சமூக பணித்துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் இணைந்து நடத்திய போதைப் பொருள் இல்லா புதுவையை நோக்கி: இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி வகுப்பு புதுவை பல்கலைக்கழகத்தில் நேற்று தொடங்கியது. இந்த பயிற்சி பட்டறைக்கு புதுவையில் உள்ள 8க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு கல்லூரிகளில் இருந்து சுமார் 70 மாணவர்கள் கலந்து கொண்டனர். புதுவை பல்கலைக்கழக சமூக பணித்துறை தலைவர் பேராசிரியர் அன்பு வரவேற்றார்.

படிப்புகள், கல்வி கண்டுபிடிப்புகள் மற்றும் கிராமப்புற மறுசீரமைப்பு இயக்குனர் பேராசிரியர் தரணிக்கரசு சிறப்புரை ஆற்றினார். போதைப்பொருள் இல்லா புதுச்சேரி மாவட்டம் என்ற திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் பேராசிரியர் நளினி திட்டத்தின் செயல்பாடுகளை மாணவர்களுக்கு கூறினார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தொழில் முனைவோர் சரத்பாபு போதைப்பொருள் தடுப்பதில் இளைஞர்களின் பங்கு குறித்து பேசினார். மகாத்மா காந்தி மருத்துவமனை மனநல மருத்துவர் டாக்டர் பார்த்திபன் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் விளைவுகளைப் பற்றி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கினார். மற்றொரு பயிற்சியாளரான பெங்களூரு நிமான்ஸை சேர்ந்த பாரத் போதைப்பொருள் உபயோகிப்பவரை கையாளுதல் பற்றி பயிற்சி அளித்தார். இத்திட்டத்தின் இணை ஆய்வாளரான முனைவர் இப்திகார் ஆலம் முதல் நாள் நிகழ்ச்சிக்கு நன்றி கூறினார். ஐந்து நாள் பயிற்சி பட்டறை முடிந்த பின் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.